# Dépliant – L'assurance médicaments, c'est obligatoire !

## Version en tamoul

### மருந்துச்சீட்டு மருந்துக் காப்புறுதி (Prescription Drug Insurance)

### இது கட்டாயமானது!

கியுபெக்கில் வசிக்கும் மருத்துவக் காப்புறுதிக்கு (Heath Insurance) தகுதியான ஒவ்வொருவரும் (பெரியோர்கள், சிறுவர்கள்) கட்டாயமாக மருந்துச் சீட்டு மருந்துக் காப்புறுதிக்குத் தகுதியானவர்கள் ஆவர். இவர்கள் மருந்துச் சீட்டு மூலம் மருந்துகளைப் பெறாதுவிட்டாலும் இவர்களும் இதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கியுபெக் மருத்துவக் காப்புறுதி திட்டத்திற்காக (Québec Health Insurance) காத்திருப்பவர்கள் மாத்திரம் அந்தக் கால பகுதியினுள் இம் மருந்துச்சீட்டு மருந்துக்காப்புறுதியைப் பெற்றிருக்கத் தேவையில்லை.

கியுபெக்கின் மருந்துச்சீட்டு மருந்துக்காப்புறுதியானது 2 வகையானது.

1. தனியார் திட்டம் (இணைந்த காப்புறுதி அல்லது ஊழியர் நலத்திட்டம்) – Private Plans

2. பொதுத்திட்டம் (Régie de l'assurance malade du Québec ஆல் நிர்வகிக்கப்படுகின்றது) – Pubic Plan

நீங்கள் தனியார் திட்டத்திற்குத் தகுதியானவரானால் அதிற் சேர்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் Régie யுடன் தொடர்பு கொண்டு பொது திட்டத்திற்குப் பதிவு செய்யவும்.

உங்கள் நிலையினை நீங்கள் அறிய வேண்டுமாயின் www.ramq.gouv.qc.ca ல் பார்ப்பதன் மூலம் உங்கள் விரும்பத்தகாத ஆச்சரியத்தினை தவிர்த்துக்கொள்ளலாம்.

நீங்கள் கட்டாயமானதான மருந்துச்சீட்டு மருந்துக்காப்புறுதியுனுள் அடக்கப்படாதுவிட்டால் நீங்கள்வருமானவரி கியுபெக்கிற்கு (Revenue Québec) பொதுத்திட்டத்திற்குச் சமமான ஒரு பிரிமியத்தொகையை ஒவ்வொரு மாதமும் கட்டவேண்டும்.

மேலும் நீங்கள் தனியார் திட்டத்திற்குத் தகுதியுள்ளவரக இருந்தும், பொதுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்திருந்தால், நீங்கள் பொதுத் திட்டத்திற்கு தகுதியற்றவராக உள்ள காலப்பகுதியுனுள் வாங்கிய மருந்துச் சீட்டு மருந்துகளிற்குத் உரிய தொகையை Régie ற்குச் செலுத்த வேண்டும். Régie யும் வருமானவரி கியுபெக்கும் இணைந்து தொடர்ச்சியான கவனிப்புகளை மேற்கொள்ளும்.

**தனியார் திட்டங்கள்**

தனியார் திட்டத்தில் சேருவதற்கு 2 வழிகள் உள்ளன

1. உங்களின் வேலை அல்லது தொழில் ( வேலை கொள்பவர் யூனியன், தொடழில்துறை சார்ந்த சங்கங்கள் அல்லது ஓடர்) மூலம்
2. உங்கள் வாழ்க்கைத் துணை அல்லது பெற்றோர் மூலம்.

நீங்கள் தனியார் திட்டத்திற்கு உரித்தானவராக இருந்தால் கட்டாயமாக அதில் சேருவதுடன் உங்கள் வாழ்க்கைத் துணையும் பிள்ளைகளையும் அத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளவும் , அவர்கள் வேறொரு தனியார் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருந்தால் மீண்டும் சேரத் தேவையில்லை. நீங்கள் தனியார் திட்டத்தின் கீழ்ச் சேர்ந்தவுடன் பொதுத் திட்டத்திலிருந்து நீங்கள் விலகுவதக Régie க்கு கட்டாயமாக அறிவிக்க வேண்டும்.

**வாழ்க்கைத் துணையும் பிள்ளைகளும்.**

இருவர் (எதிரான பால் அல்லது ஒத்த பாலாக இருந்தாலும் சரி) அவர்கள்

- விவாகம் செய்தவர்கள் அல்லது சட்டப்படி இணைந்தவர்கள்.
- 12 மாதங்கள் ஒன்றாக வாழ்பவர்கள் (90 நாட்களுக்குட்பட்ட பிரிந்திருந்தால் இந்த 12 மாத காலப்பகுதியினுள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது)
- ஒன்றாக வாழ்பவர்கள் (காலம் வரையறையற்றது) அத்துடன் எப்போதாவது ஒரு பிள்ளை இருந்தால் அல்லது ஒரு பிள்ளையைத் தத்து எடுத்து இருந்தால்.

**பிள்ளைகள்** எனக் கருதப்படுவோர் (ஆண், பெண் இருவரும்)

- 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள்
- 18 - 25 வயதிற்கு இடைப்பட்ட முழுநேர மாணவனாக, வாழ்க்கைத் துணை இல்லாது பெற்றோருடன் வசிப்பவர்கள்.

இப் பிள்ளைகளின் பெற்றோர், பிள்ளை 18 வயதை அடையும் போது தனிப்பட்ட காப்புறுதியாளரிடம் அல்லது Régie யிடந் தங்களது பிள்ளையையும் காப்புறுதியிற் சேர்க்கும்படி கட்டாயமாகக் கேட்க வேண்டும்.

**பொதுத்திட்டம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளோர் பொதுத் திட்டத்திற்குத் தகுதி வாய்ந்தவர்கள் ஆவர் .

- தனியார் திட்டத்திற்குத் தகுதி இல்லாதவர்கள்.
- Ministère de l'Emploi et de la Solidarité sociale ஆல் வழங்கப்பட்ட கிளைம் சிலிப் (Claim Slip) வைத்திருப்பவர்கள்.
- 65 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும், ஒருவர் 65 வயதை அடைந்தாலும் தனியார் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் இருக்கலாம். இவர் தனியார் திட்டத்தைத் தெரிந்து எடுத்தால், அத் தனியார் திட்டமானது பொதுத் திட்டத்திற்குச் சமமானது (Equivalent) எனக் கருதினால், இவர் கட்டாயமாக Régie க்கு தான் பொதுத் திட்டத்திலிருந்து விலகுவதாக அறிவிக்க வேண்டும்.

- பொது திட்டத்தில் உள்ளவர்களின் பிள்ளைகள்.

**எவ்வாறு இதனைப் பெறுவது?**

- பொது திட்டத்தில் பதிவு செய்வதற்கு Régie உடன் தொடர் கொள்ளவும்.
- கிளெயிம் சிலிப் வைத்திருப்பவர்களும், 65 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் தாமாகவே பதிவு செய்யப்படுவார்கள்.

**கொண்டு வரவேண்டிய ஆவணங்கள்:**

மருந்தகத்தில் (பார்மஸியில்) உங்கள் செல்லும்படியாகவுள்ள மருத்துவக் காப்புறுதி அட்டையை (மெடிக்கல் காட்) கொடுக்க வேண்டும். தேவை ஏற்படின் கிளெயிம் சிலிப்பைக் கொடுக்கவும்.

## பொது மருந்துச்சீட்டு மருந்துக் காப்புறுதித் திட்டம் (Public Prescription Drug Insurance Plan)

**மருந்தகத்தில் கொடுக்க வேண்டியது என்ன?**

மருந்துச் சீட்டுயின் மூலம் பெறும் மருந்துகளுக்கு நீங்கள் கொடுக்கும் தொகை பங்களிப்பு (Contribution) எனக்கருதப்படும். இது மாதந்த கழிப்பனவுகளையும் இணைந்த இன்சூரன்ஸையும் கொண்டதாக அமைந்திருக்கும்.

**கழிப்பனவு என்பது என்ன? (Deductible)**

இது நீங்கள் ஒவ்வொரு மாதமும் மருந்துச் சீட்டு மூலம் வாங்கும் மருந்துகளுக்கு கழிக்கப்படும் ஒரு நிலையான தொகையே கழிப்பனவு ஆகும்.

**இணைந்த காப்புறுதி என்றால் என்ன? (Co-Insurance)**

இணைந்த காப்புறுதி என்பது மருந்துச் சீட்டு மருந்துகளுக்கான செலவின் ஒரு வீதம் ஆகும். இதிலிருந்துதான் கழிப்பனவுகள் கழிக்கப்படும்.

**அதி உச்ச வருடந்த பங்களிப்பு ( Maximum annual Contribution)**

நீங்கள் எத்தகைய திட்டத்தின் (தனியார், பொது) கீழ் இருந்தாலும், உங்கள் காப்புறுதி மருந்தினைப் பெறுவதற்கு ஒரு அதி உச்ச தொகையினைச் செலுத்த வேண்டும். உங்களின் காப்புறுதி (Insurer) செய்தவர் இந்த அதி உச்ச தொகையின் பெறுமதியானது கூடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். வருடத்தில் நீங்கள் திட்டங்களை மாற்றியிருந்தால், நீங்கள் செலுத்திய பங்களிப்பின் கணக்கு (Statement) விபரத்தைப் பெற்று அதனை நீங்கள் புதிய காப்புறுதி செய்தவரிடம் கொடுப்பதன் மூலம் ஏற்கெனவே நீங்கள் செலுத்திய தொகை கணக்கில் வைக்கப்படும்.

**பொதுத் திட்டப் பிரிமியம் (The Public Plan Premium)**

நீங்கள் எதுவித மருந்துச் சீட்டு மருந்துகளை வாங்கினாலும் சரி, வாங்காது விட்டாலும் சரி, பொது காப்புறுதித் திட்டத்தில் உங்களை உள்ளடக்குவதற்காக ஒரு பிரிமியம் தொகை கட்ட வேண்டும். இந்த பிரிமியம் தொகையினை கியுபெக் வருமான வரி சேகரித்து, உங்களின் வருமான வரி மீளளிப்பில் (Income tax return) இது குறிப்பிடப்படும். ஒவ்வொருவரின் குடும்ப வருமானத்திற்கு ஏற்ப இது வேறுபடும்.

பிரிமியத்தின் தொகை அதி உச்ச பங்களிப்பு கழிப்பனவு, இணைந்த காப்புறுதி விபரங்களை Régie's இணயத்தளத்தில் பார்வையிடலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**இணையத்தில்:** www.ramq.gouv.qc.ca

**மேலதிக விபரங்களுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:**

**கியுபெக்:**

418 646-4636

**மொன்றியல்:**

514 864-3411

**கியுபெக்கில் வேறுறெங்காவது:**

1 800 561 9749

**ATS மூலம் (செவிபுலனற்றோர்)**

**கியுபெக்:**

418 682-3939

**கியுபெக்கில் வேறுறெங்காவது:**

1 800 3613939

**தபால் மூலம்:**

Régie de l'assurance maladie du Québec
Case postale 6600
Québec (Québec) G1K 7T3

**அலுவலக நேரங்கள்:**

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி கிழமைகளில்
காலை 8:30 மணிமுதல் மாலை 4:30 மணிவரை
புதன்கிழமைகளில்
காலை 10:00 மணிமுதல் மாலை 4:30 மணிவரை
அலுவலக நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் , எமது அலுவலக தொலைபேசிகள் உங்களை தானியங்கி தகவல் முறையுடன் இணைக்கும் .

இந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள், குறிப்பிடக்கூடிய எல்லா இடங்களிலும் சட்டமாகச் செயற்படாது.